அப்படிப்பட்ட தீர்மானம் எதுவும் ஊராட்சி ஒன்றியத்தின் மூல மாக அரசு பெறவில்லை. அப்படிப் பெறப்பட்டால் அதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் போட்டு, அதற்கான மனுவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மங்கள புரத்திலே அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மலைவாழ் மக்களும் மிகவும் பின்தங்கிய மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே 20,000க்கு மேல் கால்நடைகளும் இருப்பதால், அந்த மங்கள புரத்தைச் சுற்றி 20 கிலோ மீட்டருக்கு மருந்தகங்கள் இல்லாத தாலும், அரசாங்கம் தனி கவனம் செலுத்தி, அங்கே ஒரு கால் நடை மருத்துவமனையை அமைக்க பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக உரிய தீர்மானம் இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படிப் பெறுகின்றபோது, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை மருந்தகம்.

*4206. **திரு. எம். அண்ணாமலை :**
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கணை ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசி டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 மே 3]

திரு. எம். அண்ணாமலை : பேரவைத் தலைவா அவர்களே, ஊத்தங்கரை வட்டம், புதூர்புங்கணை, தென்பெண்ணையாற்று படுகைப் பகுதியாகவும பரந்த காட்டுப்பகுதியாகவும் இருக்கின்றது. ஆகவே அங்கே கால்நடைகள் ஏராளமாக வளர்க்கக்கூடிய பகுதியாகவும் இருக்கிறது. இதைக் கருதி, அங்கே ஒரு கிளை மருந்தகம் அமைக்க அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை வட்டத்தில், ஊத்தங்கரை, அந்தியூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், மற்றும் காரப்பட்டி, காட்டேரி, காவல்பட்டி, சிங்காரப்பட்டி ஆகிய இடங்களிலும் கிளை மருநதகங்கள் செயல்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில், 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு கால்நடை மருந்தகங்களோ, கிளை நிலையங்களோ இல்லாமல் இருக்குமேயானால், உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு ஆய்வு செய்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவா் அவர்களே, இந்த புதூர்புங்கணை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமான தூரத்தில் தான் இருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. இங்கு ஒரு கிளை மருந்தகம் அமைக்க வேண்டும், மற்றும் மன்னாடிப்பட்டி என்ற பகுதியும் பரந்த கால்நடை மிகுதியாக உள்ள பகுதி. ஏற்கெனவே அதுபற்றி நான் சொன்னதற்கு, இது போன்ற செய்தி இருந்தால், அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவிக்கும்படி சொல்லியிருந்தார்கள். அங்கே அது ஒரு பரந்த பிரதேசமாக இருப்பதால், மன்னாடிப்பட்டியிலும், கிளை மருந்தகம் அமைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிற ஊராட்சிகளுக்கு சுற்றளவில் 8 கிலோ மீட்டருக்கு அருகாமையில் கால்நடை மருந்தகங்கள், கிளை நிலையங்கள் இல்லாமல் இருக்குமேயானால், அது குறித்து ஆய்வு செய்து, அரசாங்கத்தின் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]